Submitted before the Hon'ble Spl Judge/CJM, Krishnagiri.

**FIRST INFORMATION REPORT**
**முதல் தகவல் அறிக்கை**
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8051857

1. District மாவட்டம் : கிருஷ்ணகிரி    PS: காவல்நிலையம் ஊ.த.க.பிரிவு    Year ஆண்டு 2021    FIR No. மு.த.அ. எண் 4/AC/2021    Date நாள் 29.06.2021

2. (i) Act சட்டம்: ஊழல் தடுப்புச் சட்டம் 1988    Sections பிரிவுகள்: u/s 7(a)
   (ii) Act சட்டம்: 2018-ல் திருத்தியமைக்கப்பட்டபடி.    Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்:    Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்    Date from : நாள் முதல்    Date to : நாள் வரை 15.06.2021 / 16.00 மணி
   Time Period : நேர அளவு    Time from : நேரம் முதல்    Time to : நேரம் வரை 28.06.2021 / 09.45 மணி
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள்    Time : நேரம் 29.06.2021 / 15.30 மணி
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண்    Time : நேரம்

4. Type of Information : Written/ Oral :
   தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக    எழுத்து மூலம்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
   குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் உதவி செயற்பொறியாளர் அலுவலகம்,
   Beat Number : முறைக் காவல் எண்    (b) Address : முகவரி தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம், சிங்காரப்பேட்டை, கிருஷ்ணகிரி மாவட்டம்.
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்    District : மாவட்டம் 60 கி.மீ. கிழக்கு.

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையிட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் M. தினகரன்    (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் மூர்த்தி
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 23 yrs.    (d) Nationality : நாட்டினம் இந்தியன்    (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள்    Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் கூலி வேலை    (g) Address : முகவரி பெரியதள்ளப்பாடி கிராமம் மற்றும் அஞ்சல், ஊத்தங்கரை வட்டம், கிருஷ்ணகிரி மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   திரு. பட்டாபி, வணிக ஆய்வாளர், உதவி செயற்பொறியாளர் அலுவலகம், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம், சிங்காரப்பேட்டை, கிருஷ்ணகிரி மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant
   குற்றமுறையிட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
   புகார்தாரரால் தாமதம்.

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused investigation / transferred to PS ............................................ on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

29/6/21

14. Signature / Thumb impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

29/06/2021

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

29.06.2021 / 18.30 hrs.

Name: பெயர் D.M. ஜெயந்த் [illegible]
Rank: நிலை ...................No. எண் .........
காவல் ஆய்வாளர், [illegible] பிரிவு, திருநெல்வேலி.

கிருஷ்ணகிரி ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண் 4/AC/2021 சட்டப்பிரிவு7(a) of the Prevention of Corruption Act 1988 as amended in 2018 வழக்கின் முதல் தகவலறிக்கையின் தொடர்ச்சி.

---

29.06.2021ம் தேதி மாலை15.30 மணிக்கு கிருஷ்ணகிரி ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளராகிய நான் அலுவலில் இருந்தபோது, கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரை வட்டம், பெரியதள்ளப்பாடி கிராமத்தை சேர்ந்த திரு.மூ.தினகரன் த/பெ மூர்த்தி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான புகாரின் விவரம்: அனுப்புதல்: மூ.தினகரன், வயது-23, த/பெ. மூர்த்தி, க.எண்.3/190-A, அம்பேத்கர் நகர், பெரியதள்ளப்பாடி கிராமம் மற்றும் அஞ்சல், ஊத்தங்கரை வட்டம், கிருஷ்ணகிரி மாவட்டம். பெறுதல்: காவல் ஆய்வாளர் அவர்கள், லஞ்ச ஒழிப்புதுறை, கிருஷ்ணகிரி மாவட்டம். ஐயா, நான் கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரை வட்டம், பெரியதள்ளப்பாடி அஞ்சல் மற்றும் கிராமத்தில் குடும்பத்துடன் வசித்து வருகிறேன். நான் B.sc., கணிதம் படித்து விட்டு, தற்போது பெரியதள்ளப்பாடியில் உள்ள துணிகடை ஒன்றில் வேலை செய்து வருகிறேன். எனது தந்தை நான் சிறுவயதாக இருக்கும் போது இறந்துவிட்டார். எனது தாய் கூலி வேலை செய்து வருகிறார். மேலும் எனது இரண்டு தம்பிகளும் ஒருவர் டிப்ளமோ நர்சிங், மற்றொருவர் டிப்ளமோ EEE படித்து வருகிறார்கள். எனது பாட்டி சின்னபிள்ளை (தந்தையின் தாய்) என்பவர் பெயரில், பெரியதள்ளப்பாடி சர்வே எண் 66 உட்பிரிவு எண் 3A யில் 1 ஏக்கர் விவசாய நிலம் கிணற்றுடன் உள்ளது. அந்த விவசாய நிலத்தை கடந்த 2019-ஆம் ஆண்டு ஊத்தங்கரை சார்பதிவாளர் அலுவலகம் மூலம் எனது பெயருக்கு மாற்றம் செய்யப்பட்டது. பிறகு அந்த நிலத்தின் பட்டா எனது பெயரில் பட்டா மாற்றம் செய்யப்பட்டது. அந்த நிலத்தில் பூச்செடி வைத்து விவசாயம் செய்ய கடந்த மே மாதம் 2021 முதல் வாரத்தில் 5 HP மோட்டார்க்கான பூந்தோட்ட மின்இணைப்பு கேட்டு சிங்காரபேட்டை EB ஆபிசில் விண்ணப்பம் கொடுத்தேன். அதன் பிறகு 10 நாட்கள் கழித்து AE அவர்கள் பீல்டு வெரிபிகேசன் செய்ய எனது நிலத்திற்கு வந்தார். எனது கிணற்றிற்கும் அருகில் உள்ள மின் கம்பத்திற்க்கும் உள்ள தூரம் 100 அடிக்குள் இருப்பதால்

புதிய மின் கம்பம் தேவையில்லை என்று கூறிவிட்டு சென்றுவிட்டார். பிறகு 2 நாட்கள் கழித்து 14.06.2021 அன்று காலை சுமார் 10.00 மணியளவில் சிங்காரப்பேட்டையில் உள்ள EB ஆபிஸ் சென்று அலுவலகத்தில் இருந்த ஒருவரிடம் மின் இணைப்பு தொடர்பாக கேட்ட போது அவர் எனது பெயர் மற்றும் ஊரை கேட்டு AE வந்து பார்த்து விட்டாரா என்று கேட்டார். நான் பார்த்து விட்டார் என்று கூறினேன். அவர் பிறகு எனது விண்ணப்பத்தினை எடுத்து பார்த்து இதில் லைசன்ஸ் ஹோல்டர் சர்டிபிகேட் இல்லை என்றும் அதை வாங்கி கொடுக்குமாறும் கூறினார். அதனை வாங்கி கொண்டு மாறு நாள் 15.06.2021ம் தேதி காலை சுமார் 10.00 மணிக்கு சிங்காரப்பேட்டை EB ஆபிஸ் சென்று முன்பு சந்தித்த நபரிடம் லைசன்ஸ் ஹோல்டர் சர்டிபிகேட்டை கொடுத்தேன், அவர்அதை வாங்கி எனது விண்ணப்பத்துடன் இணைத்து என்னிடம் கொடுத்து CI பட்டாபி என்ற EB அலுவலரிடம் சென்று வழங்குமாறு கூறினார். அவர் கூறியதை போல் எனது விண்ணப்பத்தினை கொடுத்தேன். பிறகு CI பட்டாபி என்பவர் என்னுடைய விண்ணப்பத்தினை வாங்கி வைத்துக் கொண்டார். பிறகு அவர் நான் வந்து இடத்தை பார்க்க வேண்டும் என்றும், பார்த்து விட்டுதான் நடவடிக்கை எடுக்க முடியும் என்று சொன்னார், அன்று பிற்பகல் சுமார் 4.00 மணிக்கு பெரியதள்ளப்பாடி வந்து எனது நிலத்திற்கு கூட்டிச்செல்லுமாறும் கூறினார். நான் அவரை எனது நிலத்திற்கு அழைத்து சென்றேன். அவர் எனது நிலத்தில் உள்ள விவசாய கிணற்றிலிருந்து அருகே உள்ள மின் கம்பம் வரை உள்ள தூரத்தை டேப் மூலம் அளந்து பார்த்து விட்டு, மின் கம்பத்திலிருந்து கிணறு 100அடிக்குள் இல்லை என்றும், அதனால் புதிய மின் கம்பம் வைக்க வேண்டும் என்றும், புதிய மின் கம்பம் வைக்க வேண்டும் என்றால் பணம் ரூ.37,000/- செலவு ஆகும் என்றும் சொன்னார். பிறகு, பரவாயில்லை நான் அட்ஜஸ் செய்து சர்வீஸ் தருகிறேன் என்றும், ரூ.10,000/- எனக்கு கொடுத்து விடு என்று பட்டாபி லஞ்சமாக கேட்டார். அதற்கு நான் எனது வீட்டில் கலந்து பேசிவிட்டு வருகிறேன் என்று சொன்னேன். அதற்கு அவர், சரி பேசிவிட்டு வா என்று சொல்லிவிட்டு சென்றுவிட்டார். பிறகு, 28.06.2021 அன்று காலை சுமார் 09.45 மணியளவில் சிங்காரப்பேட்டை EB ஆபீஸ் சென்று CI பட்டாபி அவர்களை சந்தித்து எனது மின் இணைப்பு பற்றி

கேட்டேன். அதற்கு, அவர் பணம் ரூ.10,000/- கொண்டு வந்திருக்கிறாயா என்று கேட்டார். நான், என்னால் அவ்வளவு பணம் ரெடி பண்ண முடியவில்லை என்றும், கடனாக கேட்டு தற்போது ரூ.6,000/- மட்டும் ரெடி பன்னியுள்ளதாக சொன்னேன். அதற்கு அவர் சாயந்திரம் வந்துவிடு பேசிக்கொள்ளலாம் என்று சொன்னார். அதற்கு நான் என்னால் ரூ.6,000/- மேல் ரெடி பண்ணமுடியாது என்றும் கொஞ்சம் குறைத்து சொல்லுமாறும் கேட்டேன். அதற்கு அவர் புதிதாக கம்பம் போட்டால் ரூ.37,000/-க்கு மேல் செலவு ஆகும் என்றும் அதனால் எனக்கு மட்டும் தனியாக ரூ.7,000/- கொடுத்து விடு நான் வேலையை முடித்துவிடுகிறேன் என்று சொன்னார். பின்னர் நீ EB க்கு கட்ட வேண்டிய இதர கட்டணத்தை நான் பின்னல் கூறுகிறேன் அதை நீ கட்டி விடு என்று கூறினார். என்னிடம் CI பட்டாபி லஞ்சமாக கேட்ட பணம் ரூ.7,000/- கொடுத்து வேலையை முடிக்க விருப்பமில்லை. எனவே, என்னிடம் லஞ்சமாக பணம் கேட்ட CI பட்டாபி என்பவர் மீது சட்டரீதியான நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு Sd/-xxxxx. மூ.தினகரன், 29.06.2021. மேற்படி எழுத்துமூலமான புகாரைப் பெற்று அதன் தன்மைப்படி இன்று 29.06.2021ம் தேதி மாலை 17.30 மணிக்கு கிருஷ்ணகிரி மாவட்ட ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண் 4/AC/2021 u/s 7(a) of the Prevention of Corruption Act 1988 as Amended in 2018 படிக்கு வழக்கு பதிவு செய்து, முதல் தகவலறிக்கையின் அசல் மற்றும் புகார் ஆகியவற்றை கிருஷ்ணகிரி மாவட்ட சிறப்பு நீதிபதி மற்றும் தலைமை குற்றவியல் நடுவர் கிருஷ்ணகிரி அவர்களுக்கு அனுப்பிவைத்தேன். மற்ற நகல்களை சம்மந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பிவைத்தேன்.

D.M. [signature]
29/06/2021.
Inspector of Police,
VEAC, Krishnagiri.